Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 8 (5-5-66) இதழ் 87

பராபவ சித்திரை 22 முஹர்ரம் பிறை 13 வியாழக்கிழமை

## கேரளத்தில் இலங்கை வீரர்கள்

திருவனந்தபுரம், மே 4

இம்மாதம் 7ந் திகதி முதல் 9ந் திகதிவரை திருவனந்தபுரத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே நடைபெறவிருக்கும் கிழக்குப் பிராந்திய டேவிஸ் கப் 'பி' பிரிவில் இலங்கை சார்பாக விளையாடவிருக்கும் பி. எல். பிண்டோ, ஜி. என். பெரேரா ஆகியோர் இன்றுஇங்கு வந்துசேர்ந்தார்கள்.

இலங்கைக் கோஷ்டிக்கு திரு. டி. என். ரஸ்டம்ஜீ தலைவர். ஆனால் அவர் விளையாட்டில் பங்குபற்றுபவர் அல்ல.

இந்தியாவின் சார்பாக இப்போட்டியில் பங்குபற்றும் ஆர். கிருஷ்ணன், பிரேமஜித்லால், ரபி வெங்கடேசன், எஸ். பி. மிஸ்ரா ஆகியோரும் இன்று இங்கு வந்துசேர்ந்தனர். (பி டி ஐ)

# மீன்பிடி வலைதிருட்டை ஒழிக்கமுயற்சி

## பொலிஸ் ரோந்து நடவடிக்கைகள் தீவிரம்

யாழ்ப்பாணம், வியாழன்

மீன்பிடி தொழிலாளர்களின் விலையுயர்ந்த வலைகள் அடிக்கடி காணமல் போவது குறித்து புகார்கள் கிடைப்பதாகப் பொலிஸ் வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

இப்படி வலைகள் காணமல் போகும் சம்பவங்கள் கரையூர்ப் பகுதிகளிலேயே அதிகமாக நடப்பதாகவும் இச்சம்பவங்களை நிறுத்துவதன் மூலம் மீன்பிடியாளர்களுக்கு உதவி புரிவதற்கான தீவிர நடவடிக்கைகளை பொலிசார் எடுத்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

கடந்த சில தினங்களில் மட்டும் சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான காணமற்போன மீன்பிடி வலைகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், இந்தச் சம்பவங்கள் நடைபெறும் பகுதிகளில் பொலிஸ்ரோந்து வேலைகள் தீவிரப் படுத்தப்பட்டிருப்பதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

வலைகள் காணமற்போனதாக சிலர் பொய்த் தகவல் கொடுப்பதாக கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது. விலையுயர்ந்த வலைகள் காணமல் போனதாக பொலிசில் அறிவித்து அத்தாட்சி பெறுவதின் மூலம் மீன்பிடி கூட்டுத்தாபனத்திடமிருந்து புதிய வலைகள் பெற்றுக்கொள்ள சிலர் முயற்சிகள்செய்வதாகவும் அறியப்படுகின்றது.

மீன்பிடியாளர்களின் வலைகளைத் திருடுவதன்முலம் அவர்களுக்குநஷ்டம் உண்டாக்க முயல்பவர்களைக்கண்டு பிடித்து சட்டத்தின்முன் தண்டனை பெற்றுக்கொடுக்க யாழ்ப்பாணம் பொலிஸார் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். (ந. நி.)

## கொழும்பில் பல்லாயிரம் வெஸாக் பக்தர்கள்

கொழும்பு, புதன்

வெஸாக் தினத்தை முன்னிட்டு கொழும்பு வரும் யாத்திரிகர்களுக்கு இலங்கைப்போக்குவரத்துச் சபையும், ரயில்வேயும் விசேஷ ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றன.

நாட்டிலுள்ள சகல பௌத்த ஆலயங்களிலும் இன்று தூயவெள்ளை உடையணிந்த பக்தர்கள் மலர்களுடன் சென்று போதிசத்துவருக்கு அஞ்சலிசெலுத்தினார்கள். பல பௌத்தமத ஸ்தாபனங்கள் விசேஷ வழிபாடுகளை நடத்தின.

உபதேசங்கள், அறிவுரைகள், கரோல்கள், தீபாலங்காரங்கள் ஆகியன பல இடங்களில் இடம்பெற்றன. நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் வெஸாக் தினத்தை முன்னிட்டு தலைநகருக்கு வந்திருக்கிறார்கள்.

ஏர் சிலோன் ஸ்தாபனம் இன்று இரத்மலானையிலிருந்து 15 முதல் 20 நிமிஷங்கள் செல்லும் விமானச் சேவையை நடாத்தியது. இதற்குக் கட்டணம் 15 ரூபாய். நாளையும் நாளை மறுதினமும் இதேபோன்ற விமானசேவைகள் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்.

### வெஸாக் செய்தி

துன்பத்தை நீக்கும் வழியை புத்தபெருமான் காட்டினாரென்றும், புத்தர் போதித்த தர்மநெறியில் செல்ல நம்மை நாம் அர்ப்பணிக்கவேண்டும் என்றும, எல்லோரும் தர்மநெறியில் செல்லவேண்டும் என்றும் கவர்னர் ஜெனரல் வில்லியம் கோபல்லவா விடுத்துள்ள வெஸாக்தின செய்தியில் கூறியிருக்கிறார்.

## இந்தியாவில் கொண்டாட்டம்

ஜாம்ஷெட்பூர், மே 4

இலங்கையைப் போலவே இன்று இந்தியா முழுவதும் பௌத்தஜயந்தி கொண்டாடப்பட்டது.

பௌத்த ஜயந்திக்கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் பௌத்தஆலயம் ஒன்றைத் திறந்துவைக்கும் பொருட்டு இன்று ஜாம்ஷெட்பூர் வந்துசேர்ந்தார்.

இன்று டில்லியில் விசேஷ பிரார்த்தனைகளும் உபந்நியாசங்களும் இடம்பெற்றன. டில்லி பௌத்தவிகாரையில் நடைபெற்ற புத்த ஜயந்தி வைபவத்திற்குப் பிரதமர் இந்திராகாந்தி தலைமைவகித்தார்.

ஆசியா இதுவரை உற்பத்திசெய்த மிகப் பெரும் போதகர் புத்தர் என இவ் வைபவத்தில் பேசியபோது பலர் குறிப்பிட்டார்கள்.

## அணை உடைந்து 96 பேர் பலி

சோபியா, மே 4

பல்கேரியாவில் அணை ஒன்று உடைந்ததால் 96 பேர் மாண்டனர். 153 வீடுகள் தரைமட்டமாகின.

## ''கத்தி வெட்டுக்களினலேயே காயங்கள் ஏற்பட்டிருந்தன''

### அச்செழு கொலைவழக்கு விசாரணை

### டாக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், வியா.

''காலஞ்சென்றவரின் உடலில் ஐந்து உள் காயங்கள் காணப்பட்டன. அவற்றுள் இருகாயங்கள், கழுத்தின் இருபக்கங்களிலும் காணப்பட்டன.''

அச்செழு கொலை வழக்கு விசாரணையின்போது சாட்சியமளித்த உதவி சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

இக்கொலை வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில், நீதிபதி திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது டாக்டர் சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:-

இவ்வருடம் பெப்ரவரி மாதம் 22-ம் திகதி காலை 10-30 மணிக்கு பிரேத பரிசோனை நடத்தினேன். மற்றெருகாயம் அவரது வயிற்றைப் பிளந்திருந்தது. இக்காயத்திஞல் சிறுகுடல்கள் வெளியில் வந்திருந்ததை காணக்கூடியதாயிருந்தது. காலஞ்சென்றவரின் வயிற்றிலுள்ள பொருட்களில் பழங்கள்ளுநாற்றம் வீசியது. எல்லாக்காயங்களும், கத்தியினல்வெட்டியதால் ஏற்பட்டவை.

இவ்வழக்கில் இவ்வருடம் பெப்ரவரி 21-ம் திகதி வைரவன் கோவிந்தன் என்பவர் அவரது மைத்துனர் மனுவேல் கபிரியலைக் கத்தியால் வெட்டிக்கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் அட்வக்கேட் ரி. கணேசலிங்கம், புரக்டர் வி. செல்லத்துரையின் அனுசரணையுடன் ஆஜராஞர். கோப்பாய் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ரெட்றிக்கோ வழக்கை நடத்திஞர். விசாரணையின் பின் நீதிபதி [illegible] தேதிவரை ஒத்திவைத்தார்.

## பழைய ரோமாபுரி

லண்டன், மே 4

மத்தியதரைக் கடல் பிரதேசத்தில் சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன் நாகரீகமிக்க நகரமாக விளங்கியதாகக் கருதப்படும் ரோம் நகரத்தை மீண்டும் புதுப்பிப்பதற்கு பென்சிலோனிய பல்கலைக்கழகம் முன்வந்துள்ளது. இந்நகரின் முக்கிய பகுதிகள் பூமியில் புதையுண்டு கிடப்பதால்அவையெல்லாம் தோண்டியெடுக்கப்பட விருக்கின்றன.

## யாழ்ப்பாணத்தில் டாக்டர் ஜோன் மார்

### பிரதேச கலாமன்றம் வரவேற்பு

யாழ்ப்பாணம், வியா.

கோலாலம்பூர் உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டிலிருந்து லண்டன் திரும்பும் வழியில் இலங்கையில் தங்கிய லண்டன் கலைக்கழகத்துகீழைத்தேச, ஆபிரிக்க பிரிவில் தமிழிலும் கர்நாடக சங்கீதத்திலும் விரிவுரையாளரான டாக்டர் ஜோன் மாருக்கு யாழ்ப்பாணம் பிரதேச கலாமன்றத்தின் சார்பாக ஒரு வரவேற்புபசாரம் சென்ற செவ்வாய்க்கிழமை மாலை சுண்டிக்குளி 'டாம்கோட்'டில் நடைபெற்றது. அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா டாக்டர் மாரை வரவேற்று சபையோருக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

திருமதி பரமேஸ்வரி விஜயரத்தினத்தின் இன்னிசைக் கச்சேரியும், திருமதி குமாரசுவாமி மாணவிகளின் நாட்டியக் கச்சேரியும் நிகழ்ந்தபின் டாக்டர் மார் சிறிது நேரம் ஆங்கிலத்தில் பேசிவிட்டு நான்கு கர்நாடக சங்கித உருப்படிகளைப் பாடி சபையோரை மகிழ்வித்தார். திரு. சோமாஸ்கந்தசர்மாவும் திரு. இராமநாதனும் அவருக்குமுறையே வயலின், மிருதங்கம் ஆகியவற்றில் பக்கவாத்தியம் வாசித்தனர். டாக்டர் மார் [illegible] லண்டனுக்குப் பயணமாஞர்.

## 'அன்று கேலிசெய்தவர்கள் இன்று ஆதரிக்கிறர்கள்'

### பூதான இயக்க வளர்ச்சிபற்றி சர்வோதய மண்டலப் பிரமுகர்

யாழ்ப்பாணம், வெள்ளி

'ஆன்மீகத்தினல் மனிதன் அடையவேண்டிய வளர்ச்சியை அடையாமல், அயலவனை சகோதரனென மதியாமல் வாழ்வதில் எதுவிதபயனும் ஏற்படப்போவதில்லை. 'நான், எனக்காக என்றஅகந்தை ஒழிந்து, பணத்தை சேர்க்கவேண்டும், மேலும் மேலும் குவிக்கவேண்டும் என்ற எண்ணம் மறைந்து, உள்ளத்தால் உயர்ச்சிபெற்றல் தான் நிம்மதியாகவாழ முடியும்'

வண்ணைவைத்தீஸ்வர வித்தியாசாலை மண்டபத்தில் தமிழ்நாடு பூதான இயக்கக் காரியதரிசி திரு. எஸ். ஆர். சுப்பிரமணியம் 'சர்வோதய கிராமப்புரட்சி' என்பது பற்றிப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. கு. நேசையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும்கூறியதாவது:— ஆரம்பத்தில் பூதான இயக்கத்தை கேலிசெய்தவர்கள், இன்று ஆதரிக்கிறர்கள். நிலத்தை கேட்டபோது வழங்க மறுத்தவர்கள் இன்று தாஞகவே வழங்குகிறர்கள். இந்தநிலம் வழங்கும் புரட்சியை தமிழ்நாட்டில் பல இடங்களில் நானேநேரில்கண்டுள்ளேன். விஞேபாஜி தள்ளாத வயதிலும் இந்த இயக்கத்திற்காக தொடர்ந்து பணியாற்றி வருகிறர். இந்த இயக்கம் தொடங்கி 15 ஆண்டுகள் ஆகின்றது, ஆனல் குறிக்கோள் இன்னும் நிறைவேறவில்லை மனமாற்றத்தின் மூலம் 50 லட்சம்ஏக்கர்வழங்கப்பட்டிருக்கிறது. சென்னைமாகாணத்தில் மட்டுமே 80ஆயிரம் ஏக்கர் வழங்கப்பட்டிருக்கிறது. 30,000 ஏக்கரில் ஏழைகள் பயிரிட்டுக் கொண்டிருக்கிறர்கள்.

இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் இரண்டாவதுசத்தியாக்கிரகியாக இருந்த இராமகிருஷ்ண ரெட்டியாரிடம் நாங்கள் நிலம் வாங்க சென்றபோது முதலில் சம்மதிக்கவில்லை. பூதான இயக்கத்தைப்பற்றி இரு தினங்கள் தெளிவாக எடுத்துக்கூறினேம். பூதான இயக்கம் ஒரு அன்புப் புரட்சி. கடைசியில் எங்கள் அன்பு வார்த்தைகளுக்கு இசைந்து 100 ஏக்கர் நில

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

பிறருடைய குற்றம் நமக்கு சுலபமாகத் தெரியும். ஆனல் நமது குற்றத்தைத் தெரிந்து கொள்வது மிக்க கடினம். பிறரது குற்றங்களை வெளிப்படையாகத் தூற்றுகையில் நமது குற்றங்கள் ஓடி ஒளிக்கின்றன. அவற்றை உணர்ந்து திருந்துவதுதான் நம் முன்னேற்றத்துக்கு வழி.

— புத்தர் பெருமான்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna: Phone: 327

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு சித்திரை மீ 22 உ (5-5-66)


## பிரதமரின் வேண்டுகோள்

பிரதமர் திரு. டட்லி சேனநாயகா கண்டியில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் பௌத்த மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். சகோதரத்துவம், அன்பு, கருணை இவற்றைக் கடைப்பிடித்து இன, மத பேதமின்றி நடந்து கொள்வதே புத்தரின் போதனைகளை உண்மையில் கடைப்பிடிப்பதாக இருக்கும் என்று சரியாக அறிவுறுத்தினார். இலங்கையிலே பௌத்தர்களே அதிகம். புத்தர்பெருமான் கூறிய போதனைகளின்படி அவர்கள் நடப்பதாயின், இந்நாட்டிலே பல பிரச்னைகளும் வெகு சுலபமாகத்தீரும். ஆனல் அவ்விதம் வெகுவாக நடவாததால் பலபல சங்கடங்களும் சிக்கல்களும் ஏற்படுகின்றன.

பௌத்தர்கள் மட்டுமல்ல. மற்ற மதத்வர்கள் நிலையும் இப்படித்தான். எல்லாச் சமயப் பெரியோர்களின் உபதேசங்களும், அன்பு, கருணை, சகோதரத்துவம் இவற்றையே போதித்துள்ளனர். நல்வாழ்வுக்கான வழிவகைகளையும் வகுத்துக் கொடுத்திருக்கின்றார்கள். ஆனல் அதன்படி மக்களில் பெரும்பாலோரும் நடக்கத்தவறுகின்றார்கள். சுயநலமும், பேராசையும், துவேஷங்களும், வெறுப்புகளும் அதிகரித்து வருகின்றன. ஒரு சமயத்தவருக்கும் மற்றச் சமயத்தவருக்கும் மட்டுமன்றி ஒரு சமயத்தவருக்குள்ளாகவே பல வேற்றுமைகள் உள்ளன. உதாரணமாக சைவசமூகத்திலே தீண்டாமை, சாதிக் கொடுமைகள் இருந்து வருவதைப்விளக்கத் தேவையில்லை. ''அன்பேசிவம்'' என்று கூறுகிற சைவர்கள், அந்த அன்பைகடைப்பிடிப்பதாயின், இவ்வித கொடுமைகளுக்கு இடமிருக்க முடியுமா?

புத்த, இந்து, இஸ்லாம் முதலிய சமயங்கள் மதுபானம் செய்வதை ஒரு பாவமாகக் கருதுகின்றன. என்றாலும் மதுபான உற்பத்தியும், விற்பனையும் இங்கு வரவர அதிகரிக்கின்றனவேயன்றி குறைவதற்கான வழியைக் காணவில்லை. ஒரு பக்கம் மத விழாக்களைப் பிரமாதமாக நடத்திக் கொண்டு, மதக் கோட்பாட்டுக்கு நேர்மாறாகக் காரியங்கள் செய்வதால் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளுகின்றோம். மதத்தால் நன்மை கிடைக்காத்துடன் மதங்களிடம் மக்களுக்கு மதிப்புக் குறைந்து எல்லாம் வெறும் வெளிவேஷமாகின்றன. இந்தியாவிலே அரசியல் சட்டத்திலேயே மதுவிலக்குக் கொள்கை ஒப்புக் கொள்ளப்பட்டுப் பெரும்பகுதியில் மதுவிலக்கு அமுலுக்கு வந்துள்ளது. இதனல் பல கிராமமக்களின் வாழ்க்கையே மறுமலர்ச்சி அடைந்துள்ளது. ஆகவே ''தர்மதுவீபம்'' என்று சொல்லப்படும் இப்புனித நாட்டில் மதுவிலக்கை தேசிய அரசாங்கம் சட்டமூலம் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். இதைப்பற்றி பௌத்த தலைவர்கள் தீவிர பிரசாரம் செய்து வற்புறுத்தினல் தேசிய அரசாங்கம் இதற்குச் செவிசாய்க்காமல் இருக்க முடியாது.

போயா விடுமுறையை விட்டும், அந்தப் புனித நாட்களில் ஆலயங்களுக்குச் சென்று சமய விஷயங்களில் ஈடுபடுவதற்குபதில், கூடாத வழிகளில் அந்நாட்களைப் பாழாக்குவதாகப் புகார் சொல்லப்படுகின்றது. மத அனுஷ்டானங்களில் மக்களின் நம்பிக்கை குறைந்து எல்லாம் வெளிவேஷமாயின் அது ஆபத்தாகும், இதை உணர்ந்து, சமய வாழ்விலே நம்பிக்கையுள்ள தலைவர்கள், தாங்கள் நல்லவழிகாட்டி, முன்மாதிரியாக நிற்பின், மற்ற மக்களும் அவர்களைப் பின்பற்றி நடக்கவும், சமூகமும் நாடும் அமைதியாகவும் சுபிட்சமாகவும் முன்னேறவும் முடியும்.

## பண்ணைப் பாதை ஆபத்து

யாழ்ப்பாணத்துக்கும் தீவுப்பகுதிகளுக்கும் போடப்பட்டுள்ள பண்ணைப் பாதைகளில் அடிக்கடி பஸ் விபத்து ஏற்பட்டு, மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதாக ஓர் அன்பர் எழுதியுள்ள கடிதத்தைப் பிறிதோர் இடத்தில் பிரசுரித்துள்ளோம். வர வர அவ்வழியால் போக்கு வரத்துகள் அதிகரித்துள்ளதால், அவற்றை அகலமாக்கி சீராகவைத்திருக்கவேண்டிய அவசியம் அதிகரித்துள்ளது. இதைப் பற்றி பொதுமக்களும், ஸ்தல அதிகாரிகளும் முறையிட்டும், அரசாங்கம் செவிசாய்க்காமல் மௌனம் சாதித்து வருவது துரதிருஷ்ட வசமாகும். இப்பகுதிகளிலுள்ள எம். பி.மார்கள் சேர்ந்து தேசிய அரசாங்கத்துக்கு எடுத்துச் சொல்லி, மக்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் தக்க நடவடிக்கைகளை எடுக்கச்செய்யவேண்டும். யாழ்ப்பாண அரசாங்க அதிபரும் இதில் சிரத்தைகாட்டி, உடன் தக்க முயற்சி செய்யின் இப்பகுதி மக்களின் நன்றிக்குப் பாத்திரமாவார். இதற்கு அதிகம் செலவாகாது. அப்படி ஆவதாயினும், பொதுமக்களின் நன்மையைக் கருதி அதைச் செய்யவேண்டியது அவசியமாகும்,

### அந்தமானில் குடியேற்றம்

புதுடில்லி, மே 4

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வந்த 1 லட்சம் அகதிகள் அந்தமானில் குடியேற்றப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டது.

தமிழ் நாடு

## சர்வோதயமண்டல செயலாளர் எஸ். ஆர். சுப்பிரமணியம்

தமிழ்நாடு சோஷலிஸ்ற் கட்சித் தலைவராக இருந்து பெரும்பணியாற்றிய திரு. எஸ். ஆர். சுப்பிரமணியம் சோஷலிஸ்ட்கட்சி, காங்கிரசுடன் இணைந்திருந்த காலத்தில் சரித்திரப்புகழ்பெற்ற ஆகஸ்ட் புரட்சி வீரராக இருந்தார்.

சோஷலிஸ்ட்கட்சித் தலைவர் ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண் அரசியலுக்கு முழுக்குப் போட்டு சர்வோதய சேவகளுக மாறியதைத் தொடர்ந்து திரு. எல். ஆர். சுப்பிரமணியமும் தமிழ்நாடு சோஷலிஸ்ட் கட்சியில் இருந்து விலகி காந்திய சர்வோதய இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு உழைத்து வருகின்ருர்.

ஆச்சார்ய விநோபாஜி தென்னுடு வந்தபோது பூமிதான இயக்கத்தில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு உழைத்து பல்லாயிரக்கணக்கான நிலத்தைப் பூமிதானமாகப் கிடைக்க வழிசெய்தார். தமிழ்நாட்டில் முதன்முதல் கிராமதானமான வயலூர் கிராமம் கிடைக்க இவரே மிகப் பிரயாசை எடுத்து கிராமதானம் கிடைக்கச் செய்தார்.

விநோபாஜியின் கிராமதான இயககம் வட்டாரதானமாக புயல்வேகத்தில் மாறிக்கொண்டுவரும்வேளையில் தமிழ்நாட்டில் இவர் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வட்டாரதானம் கிடைத்து வெற்றிபெற்ருர். ஆசாரிய விநோபாஜியின் தத்துவஞானத்தில் மிகப்பற்றுள்ள இவர் ''காந்திவழி'' என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்தும் காந்தியசர்வோதய நெறிமுறைகளைப் பிரசாரம் செய்துவருகின்ருர்.

சென்றவாரம் குளியாப்பிட்டியாவுக்குச் சமீபமாக சர்வோதய சிரமதான முகாமும் சர்வோதய மகாநாடும் நடந்தது. இந்த மகாநாட்டுக்கு இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து காந்தீயசர்வோதய ஊழியர்கள் சமுகமளித்தனர். இந்த மகாநாட்டுக்கு இந்தியாவில் இருந்து ஒரு சர்வோதய தூதுகோஷ்டி வந்தது. இதற்கு லோக்சபா அங்கத்தவரும், காந்திஞாபகார்த்த கமிட்டித் தலைவருமாகிய திரு. ஆர். ஆர். திவாகர் தலைமை தாங்கினர். இக் கோஷ்டியில் ''காந்தி மார்க்'' என்ற ஆங்கில சஞ்சிகை ஆசிரியர் திரு. மகாதேவன், திரு. தேவ் குப்தா, திருமதி தேஸ் குப்தா, திரு, எல். ஆர். சுப்பிரமணியம் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

குறித்த சர்வோதய கோஷ்டியில் திரு. எஸ் ஆர். சுப்பிரமணியத்தைத் தவிர மற்றையோர் இந்தியா திரும்பினர்கள். திரு. எல். ஆர். சுப்பிரமணியம், கதிர்காமம், கண்டி முதலிய இடங்கள் சென்று திருக்கோணமலையில் காந்திசேவா சங்கக் கூட்டத்தில் பேசிவிட்டு உருத்திரபுரம் காந்திநிலைய குருகுலத்துக்கு வந்தார். அங்கு மாலை ஒரு கூட்டத்தில் பேசினர். நேற்று வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரவித்தியாலயத்தில் ''சர்வோதய கிராமப் புரட்சி' என்னும் பொருள்பற்றி ஒரு விரிவுரையாற்றிவிட்டு, இன்று காலை சென்னைக்குப் பிரயாணப்பட்டார்.

ஆசிரியருக்குக் கடிதம்

## பண்ணைப் பாதை சீர்கேடு

யாழ்ப்பாணத்துக்கும் தீவுப்பகுதிகளுக்குமிடையே உள்ள பண்ணை வீதியின் சீர்கேட்டினல் பல சந்தர்ப்பங்களில்விபத்துக்கள் நிகழ்ந்து. இதன்விளைவாகஉயிர்ச் சேதங்களும் ஏற்படட்டுவிடுகின்றன. குறிப்பாகபழைய பண்ணைக்குத் தெற்குப் பக்கத்து பாலத்திற்குச் செல்லும் வீதி மிகவும் மோசமாக உள்ளதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டுவருகின்றன. தீவுப்பகுதிக்குச் சென்ற பஸ் ஒன்று இப்பாதையால் சென்றுகொண்டிருந்தபொழுது கடலுக்குள் பாய்ந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. வீதிகள் ஓரளவு திருத்தம் செய்யப்பட்டபோதிலும் விஸ்தரிக்கப்படவில்லை. இதனல் வெள்ளப் பெருக்கான நேரத்தில் மூடப்பட்டு தண்ணீர் பாய்வது வழக்கமாகிவிட்டது. பஸ் விபத்து சம்பந்தமாக பொது மராமத்து அதிகாரியிடம் கேட்கப்பட்டபொழுது இந்த வீதி அவசரம் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்றும், பணம் ஒதுக்கித் தருமாறு அரசாங்கத்தைக் கேட்டு, அதன் மதிப்பீடும் அனுப்பியிருந்த போதும், இதுவரை பணம் ஒதுக்கப்படவில்லையென்றும் அவர் தெரிவித்தார் என்று அறிகிறேன்.

தீவுப்பகுதி பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாண அரசாங்க அதிபரும் இப்பாதையைத் திருத்துவதற்கு ஆகவேண்டிய ஒழுங்குகளை உடனடியாகச் செய்யவேண்டும்.

பல [illegible] சமயத்தவர்களும் காரைதீவு மூலமாகத்தான் நயினாதீவுக்குப் போய்வந்தவர்கள். ஆனல் இப்பொழுது பண்ணை மூலமாகப் போவது [illegible] மான பஸ்களும் கார்களும் இப்பாதையால் செல்கின்றன.

1944 ம் ஆண்டுதொடக்கம் மராமத்து இலாகாவுக்கு இதைப்பற்றி அறிவித்து வந்தும் இன்னும் இந்தப் பாதை திருத்தப்படவில்லை. பஸ் போக்குவரத்து இலாகாவும் மேலதிகாரிகளுககுத் தெரிவிக்க வேண்டும். தீவுப்பகுதி கிராமசபைகளும் இதில் அக்கறை எடுத்து இப்பாதையைத் திருத்துவதற்கு ஒழுங்குகள் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்பாதையில் இருவாகனங்கள் விலத்துப்போதுதான் விபத்துக்கள் ஏற்படுசின்றன. இப்பாதை கூடியவிரைவில் திருத்தப்பட வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

எம். குமாரசாமிப்பிள்ளை.

ஊர்காவற்றுறை

(5ம் கலத் தொடர்ச்சி)

இருக்கிருர்கள். பெண்குழந்தைகளுக்கு 'நீலாயதாக்ஷி', 'சரஸ்வதி' என்று பெயரிட்டிருக்கிருராம். ஆண் குழந்தைகளுக்கும் தமிழ்ப்பெயர்கள் வைப்பது பொருத்தமாயிராதென்று விட்டுவிட்டாராம்.

மிருதங்கம் இராமநாதன் இந்த விபரங்களையெல்லாம் வேண்டுமென்றே தமிழில் கேட்கக் கேட்க டக்டர்மார் சிறுகுழந்தைபோல கொன்னிக் கொன்னி மழலை பொழிந்தவண்ணம் மறுமொழி அளித்தார்.

டாக்டர் மார் நேற்றே திரும்பிப் போகவேண்டி இருந்ததால் பிரதேச கலாமன்றம் யாழ்ப்பாணத்தில் அவருடைய பொதுக்கச்சேரி ஒன்றை ஒழுங்குசெய்ய முடியாமற்போனது மிகவும் வருத்தமான விஷயம்.

— வழிப்போக்கன்

## நாட்டிலும் நகரிலும்

ஒருவெள்ளைக்காரர் கால் இரண்டையும்மடக்கி தரையில் சப்பாணியாக உட்கார்ந்துகொண்டு வயலின், மிருதங்கம் சகிதமாக கர்நாடக சங்கீதம் பாடும் காட்சியை நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலுள்ள 'பாம் கோட்" டில் கண்டேன். ஆங்கிலேயர் உட்படபலஐரோப்பியர் தமிழ்மொழியில் ஆர்வங்கொண்டு அதை துறைபோகக் கற்று நூல்களும் எழுதியுள்ளனர். ஆனல் தமிழர் சங்கீதத்தில் பற்றுக் கொண்டு அதை முறைப்படி கற்று கச்சேரியும் செய்யக் கூடிய ஒரே ஒரு வெள்ளைக்காரர் லண்டனைச் சேர்ந்த டக்டர் ஜோன் மார் தான்.

இவர் 1945-ம் ஆண்டில் இராணுவத்தினரோடு கோடைக்கானலில் தங்கியிருந்தபோது ஒருநாள் மாலை சண்முகப்பிரியா ராகம் வெகு தொலைவிலிருந்து நாகசுரத்தின்மூலம்காற்றில் மிதந்து வந்ததைக் கேட்டு அப்படியே சொக்கிப்போனராம். அன்றே கர்நாடக சங்கீதம் கற்க வேண்டுமென்று அவருக்கு ஆவல் பிறந்துவிட்டது. அண்ணமலை சங்கீதக் கல்லூரியில் சிறிதுகாலம் பயின்ருர். அவரோடு அங்கிருந்த சங்கீத பூஷணம் இராமநாதன்தான் அவருக்குஅன்று மிருதங்கம் வாசித்தார்.

டாக்டர் மார் இலங்கைக்குப் புதியவரல்ல. 1950.ம் ஆண்டளவில் அவர் ஒருசமயம் கொழும்பில் சில காலம் தங்கியிருநதபோது ரேடியோவிலும், கொழும்பு வை. எம். சி. ஏ. மண்டபத்திலும், ரூயல்கல்லூரியிலும் கர்நாடக சங்கிதம் பாடி கேட்டவர்கள் எல்லோலரையும் ஆச்சரியக்கடலில் மூழ்கடித்தவர். இலங்கை வானெலியில் சில அபூர்வ ராகங்களையும் உருப்படிகளையும் ஒலிப்பதிவு செய்து தமது ஆராய்ச்சிகளுக்காக லண்டனுக்கு எடுத்துச்சென்ருர்.

கொழும்புக்குக் கிடைக்காத யோகம் இம்முறை யாழ்ப்பாணத்துக்கு அடித்துவிடடது. அங்கே லயனல் வென்ட் தியேட்டரில் டாக்டர்மாரின் சங்கிதக் கச்சேரி நடக்கப்போவதாக அறிவித்துவிட்டு பின்னர் அதை ரத்துச் செய்துவிட்டார்கள். இதைப்பற்றிஅவரிடம் விசாரித்தபோது தமக்குத் தெரியாமலேயே அந்த ஏற்பாடு நடந்துவிட்டதாகவும் அதனல்தான் அதை ரத்துச் செய்ய நேரிட்டதென்றும் டாக்டர் மார் கூறினர்,

1950-இல் நான்அவரைச் சந்தித்ததற்கு பிறகு ஏதாவதுபுதியஉருப்படிகளைக் கவனம் செய்துகொண்டீர்களா என்று கேட்டதற்கு தமக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லையேன்றுகூறிவிட்டார். ஆனல் அடக்கத்தின் நிமித்தமே அப்படி கூறினர் என்பது அவர் பாடுவதைக் கேட்டபோது புலனாயிற்று. இரண்டு தீக்ஷிதர் உருப்படிகளையும் இரண்டு புரந்தரதாசர் உருப்படிகளையும் ஸ்ருதி சுத்தமாகவும், லயக் கணிசமாகவும், கர்நாடக சங்கீதத்தின் சிறப்பு லட்சணமாகிய கமகப்பிடிகள் தவருமல் அவர் பாடியபோது கூட்டத்திலிருந்தபல சங்கீத வித்வான்களே 'சபாஷ்' கூறிக்கைதட்டினர்.

லண்டன் பல்கலைக்கழகத்தில் தம்மைப்போலவே இன்னும் ஒரு ஆங்கிலேய இளைஞர் தமிழிலும் தமிழிசையிலும் ஆர்வங்காட்டி அவற்றைப் பயின்று வருகிருராம்,

டாக்டர் மாருக்கு மூன்று ஆண் குழந்தைகளும், இரண்டு பெண் குழந்தைகளும

(4ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாகா அமைதிக் குழுவிலிருந்து அஸ்ஸாம் முதல் மந்திரி ராஜினமா

## குழுவைகலைத்துவிடுமாறும்சிபார்சு: ரயில்வெடிப்பில்நாகருக்குபங்காம்

### வெளியேற்ற உத்தரவைத் தொடர்ந்து ஸ்காட் லண்டன் புறப்பட்டார்

ஷில்லாங், மே 4

அஸ்ஸாம் முதல் மந்திரி திரு. பி. பி. சாலிஹா நாகாலந்து அமைதிக்குழுவுடனை தமது தொடர்பைத் துண்டித்துக்கொண்டுவிட்டார். அதே சமயம், ரயில் வெடிப்பு, நாசவேலை ஆகியவற்றில் தலைமறைவு நாகர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாலும், வன் முறையிலேயே அவர்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாகத் தெரிவதாலும் அமைதிக்குழுவைக் கலைத்துவிடவேண்டும் என்றும், அதை நீடிக்க காரணம் எதுவுமில்லை என்றும் அவர் சிபார்சுசெய்திருக்கிறார்.

இதே சமயம் நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்ட மற்றொர் உறுப்பினரான ரெவரண்ட் மைக்கேல்ஸ்காட் ஷில்லாங்கிலிருந்து லண்டன் புறப்பட்டிருக்கிறார்.

நாகாலந்து விஷயமாக வண ஸ்காட்டின் ஒரு தரப்பு போக்கு பற்றி நேற்றைய ராஜ்ய சபைக் கூட்டத்தில் வெளிநாட்டு உதவி மந்திரி திரு. தினேஷ்சிங் அறிவித்தார்.

ஸ்காட்டின் பாதக நடவடிக்கைபற்றிதெரிவிக்கப்பட்டும், அதற்கு அவர் வருத்தம் தெரிவித்தபின்பும் தொடர்ச்சியாக அவர் ஒரு தரப்பு போக்கைக் கடைப்பிடித்தார் என்றும், நாகாலந்து பிரச்னையை சர்வதேச பிரச்னையாக்க முயன்று வந்தார் என்றும் தினேஷ்சிங் கூறினார்.

அரசாங்கத்துக்கும் பகை நாகர்களுக்குமிடையேஅவர் பயனுள்ள தொடர்பாக இருப்பார் என்ற நம்பிக்கையுடன், அவர் விஷயத்தில் அரசாங்கம் பொறுமையுடன் நடந்துவந்தது என்றும், ஆனால் தனது நடவடிக்கையின் மூலம் ஸ்காட் அதைப்பொய்ப்பித்து விட்டார் என்றும் தினேஷ்சிங் அறிவித்தார்.

ஸ்காட் துவக்கத்திலிருந்தே ஒருதரப்பு போக்கை கடைப்பிடித்து வந்தார் என்றும், ஐ. நா.வுக்கும், இதர சர்வதேச ஸ்தாபனங்களுக்கும் அவர் நாகாலந்து பற்றி எழுதிவந்தார் என்றும், பகைநாகர்கள் எழுதிய கடிதத்தையும் வெளியிட்டார் என்றும் சிங் கூறினார்.

"அவர் மேற்கொண்ட இத்தகைய நடவடிக்கைகள் அனைத்தும், அமைதிக்குழுவின் இதர உறுப்பினர்களைக் கலந்தாலோசிக்காமலேயே செய்யப்பட்டது. பகைநாகர்கள் வரி வசூலிப்பது சரியே என்று தாம் எழுதிய கட்டுரை ஒன்றையும் அவர் வெளியிட்டார். நாகாலந்து பாப்டிஸ்ட் சபையும் அவரது நடவடிக்கை குறித்து திருப்திகொள்ளவில்லை என்றும் சிங் தொடர்ந்து குறிப்பிட்டார்.

---

### நெரிசலுக்கு ௩0பேர்பலி

பாக்தாத், மே 4

ஈராக்கில் ஒரு ஜனக்கூட்டத்தில் நெரிசல் காரணமாக 30 பேர் மாண்டனர்.

---

### பிரிட்டிஷ் வரி நீங்கும்

லண்டன், மே 4

இறக்குமதிக்கான தற்போதைய 10 சத விகித மேலதிக வரியை பிரிட்டன் நவம்பர் மாதத்திலிருந்து விலக்கிக் கொள்ளும் என்ற நிதிமந்திரியின் அறிவிப்புக்குப் பிரிட்டனில் வரவேற்புக் கிடைத்திருக்கிறது. நேற்று நிதிமந்திரி தனது பட்ஜட்டை வெளியிட்டபோது இதை அறிவித்தார்.

---

### கேரள ஆட்சி

புதுடில்லி, மே 4

கேரளத்தில் ஜனதிபதி ஆட்சியை மேலும் 6 மாதங்கள் நீடிப்பது குறித்த விவாதம் நேற்று ராஜ்யசபையில் நடைபெற்றது. பருவநிலை கோளாறு காரணமாகஅங்கு இப்போது தேர்தல் நடப்பது சாத்தியமில்லை எனக் கூறப்பட்டது.

---

### இரகசியத் தகவல் கொடுத்தார்

ஏதன்ஸ், மே 4

நேட்டோ ராக்கெட்தளம் ஒன்றில் ஒரு கிரேக்கர் ரஷ்யாவுக்கு ராணுவ இரகசியங்களைக் கொடுத்ததாகக் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். கடந்த 6 மாதங்களாக இவ்வாறு அவர் ரஷ்யாவுக்கு ஏதன்ஸிலுள்ள ரஷ்ய தூதரகமூலம் தகவல் கொடுத்து வந்தாராம்.

---

### 12 பேர் பலி

புதுடில்லி, மே 4

மத்திய ரயில்வேயில் ஏற்பட்ட வெடிவிபத்து காரணமாக, இதுவரை மாண்டவர்களின் தொகை 12 ஆக அதிகரித்திருக்கிறது என அறிவிக்கப்பட்டது. 35 பேர் இன்னும் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள்.

---

### கோஸிஜின்

கெய்ரோ, மே 4

ரஷ்யப் பிரதமர் கொஸிஜின் இம்மாதம் 10-ம் திகதி ஐக்கிய அராபியக் குடியரசுக்கு விஜயம் செய்வார் என அறிவிக்கப்பட்டது.

---

### மேத்தா

வாஷிங்டன், மே 4

இந்திய திட்டமந்திரிதிரு அசோக்மேத்தா நேற்று உலகவங்கித் தலைவருடன் மீண்டும் பேச்சு நடத்தினார். [illegible] இந்தியாவுக்கு அளிக்கவிருக்கும் உதவி பற்றி அவர் திருப்தி தெரிவித்தார்.

---

வியட்னும்

## கனடாவின் முயற்சியை சீன நிராகரித்தது

### அமெரிக்கா புகுத்தியதாம்

பீகிங், மே 4

வடவியட்னுமில் யுத்த நிறுத்தம் செய்வது பற்றிய கனடாவின் புதிய முயற்சியை சீன நிராகரித்துவிட்டது. இதுஅமெரிக்க ஆதரவுபெற்ற மற்றோர் தந்திரம் என்றும், அபிப்பிராயம் தெரிவிக்கவே லாயக்கற்ற யோசனை என்றும் சீன கூறியுள்ளது.

வியட்னுமில் யுத்தத்தை நிறுத்து முகமாக அமெரிக்க, வடவியட்னுமியத் துருப்புக்கள் வாபஸ் பெறவேண்டுமென்ற அடிப்படையில், கனடா முயற்சி மேற்கொள்ளவிருப்பதாக முன்பு அறிவிக்கப்பட்டது தெரிந்திருக்கும்.

இந்தயோசனைக்கு இந்தோசீன பற்றிய சர்வதேச கண்காணிப்பு கமிஷனின் இதர உறுப்பினர்களான இந்தியாவும், போலந்தும் ஒத்துழைப்பு தருவதாக கனடா வெளிநாட்டு மந்திரி திரு. பால் மார்ட்டின் நேற்று தெரிவித்தார்.

உலகில் இன்றைய அதி முக்கிய பிரச்னை வியட்னும் தான் என்றும் அவர் கூறினார். திரு. மார்ட்டின் அடுத்த மாதம் போலந்து தலைநகர் வார்ஸாவுக்குச் சென்று இதுபற்றிப் பேசுவார் எனத் தெரிகிறது.

கனடாவின் யோசனை அமெரிக்காவினால் புகுத்தப்பட்டது என்ற சீனவின் குற்றச்சாட்டை பிரதமர் திரு. லெஸ்டர் பியர்ஸன் மறுத்துரைத்தார். சர்வதேச கண்காணிப்பு கமிஷன் அங்கத்தினர்களும் யுதாண்டும் இவ்விஷயமாக குறிப்பிட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் லாவோஸில் பதட்லாவோ பகுதிகள் மீது குண்டு வீசுவது, யுத்தத்தை விஸ்தரிப்பதாகும் என வடவியட்னும் புகார் தெரிவித்திருக்கிறது. அமெரிக்கத்துருப்புக்கள் கம்போடியாவுக்குள் நுழைந்தால், சீன அ[illegible] சகல உதவிகளும் அளிக்கும் என சீன அறிவித்திருக்கிறது.

---

தேர்தலுக்குப்பின்

## சர்வகட்சி மந்திரிசபை அமைக்க நாராயண் யோசனை

கல்கத்தா, மே 4

பொதுத் தேர்தலுக்குப் பிறகு முதன்மந்திரிகள் தங்களுடைய கட்சிகளில் உள்ளவர்களை மட்டுமல்லாமல் மற்றக் கட்சிகளில் உள்ளவர்களையும்கொண்டு மந்திரி சபைகளை அமைக்கவேண்டுமென்று சர்வோதயத் தலைவர் ஜயப்பிரகாஷ் நாராயண் யோசனை தெரிவித்தார்.

இன்று நமது ஜனநாயகத்திலுள்ள பலவீனத்தைச் சமாளிக்க அந்தந்தச் சட்ட சபைகளிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களால் முதன்மந்திரிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று ஸ்ரீ நாராயண் கூறினார்.

இந்தியாவிலுள்ள தற்போதைய அரசியல் நிலையைப் பற்றி மார்வாரி மாணவர்கள் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் ஸ்ரீ நாராயண் மேற்கண்டவாறு கூறினார்.

தேர்தலுக்கு பிறகு சட்ட சபை மெம்பர்கள் அனைவரும் தங்களுடைய கட்சித் தொடர்புகளை எல்லாம் மறந்து மக்களின் பிரதிநிதிகளாகத் தான் செயல்படவேண்டும். மற்றக் கட்சிகளைச் சேர்ந்த தகுதியுடையவர்களையும் மந்திரிகளாக நியமிப்பதற்குத் தடை எதுவும் இருக்கக்கூடாதென்றும் ஸ்ரீ நாராயண் கூறினார்.

பொதுவான கொள்கைகளை உருவாக்குவதில் எதிர்க்கட்சிகளைக் கலந்தாலோசிக்க காலஞ்சென்ற லால் பகதூர்சாஸ்திரியால் ஆரம்பித்துவைக்கப்பட்டு இப்போது ஓரளவு ஸ்ரீமதி இந்திராகாந்தியால் பின்பற்றப்பட்டுவரும் நடைமுறைக்குச் சம்பிரதாயமான உருவம் கொடுக்கப்படவேண்டுமென்று யோசனை தெரிவித்தார்.

மத்திய அரசாங்கத்திலும் ராஜ்யங்களிலும் கொள்கையை உருவாக்கும் கமிட்டிகளை அமைக்கவேண்டும். பொதுவான கொள்கைகளை உருவாக்குவதில் ஆளுங்கட்சியுடன் இந்தக் கமிட்டிகளில் எதிர்க்கட்சிகளும் தொடர்பு கொள்ளவேண்டும்.

தற்போதைய ஏக்கநிலையிலிருந்து நமது ஜனநாயகத்தைக் காப்பாற்ற விரும்பினால் ஆளுங்கட்சிக்கும் எதிர்க் கட்சிகளுக்குமிடையே இந்தக் குறைந்தபட்சத் தொடர்பு அவசியமாகும்.

### ஜனநாயகத்தின் எதிர்காலம்

ஸ்ரீ நாராயண் மேலும் கூறியதாவது: எதிர்க்கட்சிகளில் எதுவும் பதவிக்கு வரும் சாத்தியமில்லாமல் ஒவ்வொருதேர்தலிலும்காங்கிரஸேமீண்டும்மெஜாரிட்டி பெற்று பதவிக்குவரக்கூடிய வாய்ப்புள்ள தற்போதைய ஜனநாயக முறையானது ஜனநாயகத்தின்எதிர்காலம் பற்றிச் சந்தேகங்களைக் கிளப்பியுள்ளது.

நமது ஜனநாயக அமைப்பை வளர்க்கப் பலம்வாய்ந்த ஒரு எதிர்க்கட்சி அவசியமாகும். ஆனால் வேலைத் திட்டத்திலும் கொள்கையிலும் அடிப்படை வித்தியாசமுள்ள பல எதிர்க்கட்சிகள் உள்ள தற்போதைய அமைப்பில் பலம்வாய்ந்த ஒரு எதிர்க்கட்சி உருவாக இன்னும் பல வருஷங்களாகலாம்.

இரண்டு கட்சி ஏற்பாடு இருப்பது அனுகூலம். இத்தகைய ஏற்பாடு இல்லாத நிலையில் இந்தியாவில் உள்ள எதிர்க்கட்சிகள் தேர்தல் நோக்கத்துக்காக ஒரு பொதுத்திட்டத்தை உருவாக்கவேண்டும். வெறும் தேர்தல் உடன்பாட்டுடன் நின்றுவிடக்கூடாது.

### முதன்மந்திரி தேர்தல்

நமது ஜனநாயகத்தில் உள்ள பலவீனத்தைச் சமாளிக்க பொதுத்தேர்தலுக்குப் பிறகு முதன்மந்திரிகளை அந்தந்த ராஜ்யச் சட்டசபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களனைவராலும்தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். முதன்மந்திரி தமது கட்சியிலுள்ளவர்களைக் கொண்டு மட்டுமே மந்திரிசபையை அமைக்கவேண்டுமென்ற அவசியமில்லை. மற்றக் கட்சிகளையும் சேர்ந்த தகுதியுடைய அங்கத்தினர்களை மந்திரிகளாக நியமிக்கத் தடையெதுவும் இருக்கக்கூடாது தேர்தலுக்குப் பிறகு சட்டசபை அங்கத்தினர்கள் அனைவரும் தங்களுடைய கட்சித்தொடர்புகளை மறந்து மக்களின் பிரதிநிதிகளாகவே வேலைசெய்ய வேண்டும்.

கட்சி ஆட்சிமுறையில்கூட தேசியக்கொள்கைகள் விஷயமாக ஆளுங்கட்சிக்கும் எதிர்க் கட்சிகளுக்குமிடையே ஓரளவு உடன்பாடு இருக்கவேண்டும்.

ஒரு கட்சியே இந்நாட்டை நிர்ணயிப்பது என்பது சாத்தியமல்ல தங்களிடமுள்ள பொது அம்சங்களை ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சிகளும் காணவேண்டும்.

எதிர்மறையானபோக்கை அனுஷ்டிக்கவேண்டாமென்றும் பொதுவான கொள்கைகளை உருவாக்குவதில் ஆளுங்கட்சியுடன் பங்கு கொள்ளப் பயப்படக்கூடாதென்றும் எதிர்க்கட்சிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

தேசியப் பிரச்னைகளில் எதிர்க்கட்சிகளுடன் ஆலோசனை கலக்கக் காலஞ்சென்ற லால்பகதூர் சாஸ்திரி மேற்கொண்ட முயற்சி மேற்கொண்டு பின்பற்றவேண்டுமென்றார்.

---

### இந்தோனேஷியா

ஜாகர்த்தா, மே 4

இந்தோனேஷியாவில் சுகர்னேவுக்கு எதிரான புரட்சியில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் 3300 அரசாங்க ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

---

### தீவிர தேடுதல்

அல்ஜியர்ஸ், மே 4

அல்ஜீரிய சிறையிலிருந்து தப்பிச் சென்ற எதிர்க்கட்சித் தலைவரைத் தேடும் தீவிர முயற்சிகள் நாடு பூராவிலும் துவங்கியுள்ளன.

---

### ஒரே மேடையில் உரை நிகழ்த்துவர்

கொழும்பு, புதன்

தேராவட பிரிவு பௌத்த மதத்தினரும் மஹா ஜன பிரிவு பௌத்த மதத்தினரும் முதல் முறையாக ஒரு மேடையில் தோன்றி தங்கள் பிரச்னைகளை ஆராய்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 9-ந் திகதி கொழும்பு மாநகர சபை மண்டபத்தில் இக்கூட்டம் நிகழவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12-ம் வட்டார உபதேர்தல்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாநகர சபையின் 12-ம் வட்டார உப தேர்தலுக்கு தமிழ் காங்கிரஸ் சார்பில் அபேட்சகரை நிறுத்துவதா என்பது பற்றி 8-ம் திகதி நடைபெறும் கமிட்டி கூட்டத்தில் தீர்மானிக்கப்படவிருக்கிறது.

தமிழ்க்காங்கிரஸ் சார்பில் திரு. எம். ஏ. நூர்முகம்மது போட்டியிடுவாரென அறியப்படுகிறது. கடந்த மாநகர சபை தேர்தலில் 12-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட திரு. எம். எம். ஏ. காதர் சுயேச்சையாகப்போட்டியிடுவார் என்றும் அறியப்படுகிறது.

திரு. எம். எம். சுல்தான் ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து இந்த உப-தேர்தல் நடைபெறுகிறது. உப-தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் இம்மாதம் 9-ம் தேதி ஏற்றுக் கொள்ளப்படும்.

## கங்கையில் மிதந்த சடலம்

கம்பளை, புதன்

சுமார் இருபத்தைந்து வயது மதிப்பிடத்தக்க இளைஞர் ஒருவரின் சடலம் கம்பளை நகருக்கு அருகாமையில் மகாவலி கங்கையில் மிதந்துவரக்கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இச்சடலம் உடனடியாக கரைக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால் அடையாளம் கண்டு பிடிக்கப்படவில்லை.

## பிரிட்டன் கனடா உதவி

### யாழ். மீனவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும்

கொழும்பு, புதன்

பிரிட்டன், கனடா ஆகிய நாடுகளின் பட்டினி ஒழிப்பு இயக்கங்கள் இலங்கைக்கு ரூபா 1 லட்சம் வரையான உதவி வழங்கியுள்ளது.

64-ம் வருடத்தில் வீசிய சூறாவளியினால் பாதிக்கப்பட்ட வடபகுதி மீனவர்களுக்கு இந்த உதவியில் ஒரு பகுதி கிடைக்கவிருக்கிறது.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் பருத்தித்துறையில் வரும் வியாழக்கிழமை மீனவர்களுக்கான நிவாரண உதவியை வழங்குவார்.

## சிரமதான மூலம் வீதி அமைத்தனர்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் சமசமாஜவாலிப முன்னணியினரும் பாரதி மன்றத்தினரும் கூட்டாக ஒன்றுசேர்ந்து கம்பளை அம்மன் கோவில் பின்பக்கமாயுள்ள ஒருமைல் நீளமான வீதியை சிரமதான முறையில் செப்பனிட்டுள்ளனர்.

## நகரில் 25 பந்தல்கள்

கொழும்பு, புதன்

வெசாக் தினத்தை முன்னிட்டு நேற்று கொழும்பு நகரில் இருபத்தைந்து பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்தன. நாடகங்களுடன் விசேஷ கலை நிகழ்ச்சிகளும் இங்கு இடம் பெற்றன.

## புதிய சமாதான நீதவான்

வல்வெட்டித்துறை, புதன்

அரசாங்க சேவையினின்றும் இளைப்பாறிய திரு சண்முகம்பிள்ளை ஞானமூர்த்தி பருத்தித்துறை நீதிபரிபாலன எல்லைக்கு சமாதான நீதிபதியாக நீதியமைச்சினால் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

அறுபது வயது நிரம்பிய திரு ஞானமூர்த்தி நாற்பது வருடங்கள் தபால் இலாகாவில் சேவை செய்துள்ளார். இவரது ஆலோசனை அறிக்கைகள் பல இலாகாவின் உயர்தர அதிகாரிகளால் பாராட்டப்பட்டுள்ளன.

வல்வை சிதம்பரக்கல்லூரியின் பழைய மாணவரான திரு. ஞானமூர்த்தி தற்போது வல்வை மக்கள் மன்றத்தின் தலைவராகவும் வைத்தீஸ்வரன் கோயில் புனருத்தாரண சபையின் இணைச் செயலாளராகவும் இலங்கை நூற்றல் நெய்தல் ஆலை முகாமையாளராகவும் இருந்து செயலாற்றி வருகின்றார்.—

## கூட்டுறவுச் சங்கங்களில் ஊழல்கள்

வாரியப்பொலை, புதன்

இந்தநாட்டில் அதிகமான கூட்டுறவு சங்கங்களில் லஞ்ச ஊழல்கள் மலிந்துள்ளன என அளவை கூட்டுறவுச்சங்க வருடாந்த விழாவில் திரு பி ஆர் தசநாயக்கா பேசும் போது கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:- கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்படுமுன் ஏழைகள் கடன்தொல்லையால் கஷ்டப்பட்டார்கள். இச்சங்கங்கள் அவர்களின் கஷ்டத்தைத் தீர்க்க முன்வந்தன. ஆனால் இன்று இச்சங்கங்களில் உள்ள சில உத்தியோகத்தர்கள் மோசடி செய்து நேர்மையற்றமுறையில் மக்களை ஏமாற்றிவருகிறார்கள். இப்பெருச்சாளிகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க தேசிய அரசாங்கம் தவறமாட்டாது.—

## செக். நாட்டின் நூல் வெளியீடுகள்

பிரேக், மே. 4

செக்கோஸ்லோவேகிய நாட்டில். நூல்களும், சஞ்சிகைகளும் வெளியிடும் பொறுப்பு மத்திய அரசாங்கத்திடமும் சமூக அமைப்புகளிடமுந்தான் இருந்துவருகிறது. அச்சுக்கூடங்கள் இங்கு தேசிய வர்த்தகமாகும், வெளியீடு செய்வது ஓரளவு பிரத்தியேகமானவிஷயமாக இருந்துவருகிறது. அநேக வெளியீடு நிலையங்களின் தலைமைக் காரியாலயங்கள் பிரேக்கிலும், பிரிட்டிஷ்லாவியிலும் உள்ளன.

பிரதேச, தேசியசபைகளுக்கும் நூல்களும், சஞ்சிகைகளும் வெளியிடும் உரிமை இருந்து வருகிறது. சமீபகாலத்தில் பிரதேச இலக்கிய வளர்ச்சியின் பொறுப்பு பிரதேச நேசிய சபையின் பொறுப்பில்தானுள்ளது. செக். நாட்டில் 19 பிரசித்தமான வெளியீட்டு நிலையங்கள் உள்ளன.

## கல்வி சேவைக்குழு அமைக்க முயற்சி

கொழும்பு. புதன்

ஆசிரியர்களின் இடமாற்றம் பற்றியும் அவர்களின் ஒழுங்குமுறைகள் பற்றியும் கவனிப்பதற்காக அரசாங்கம் கல்வி சேவைக்குழுவொன்றை நியமிப்பதுபற்றி ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகிறது. ஆசிரியர்களின் இடமாற்றம்சம்பந்தமான அரசியல்தலையீட்டை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள உத்தேசித்துள்ளது.

## ஜே. பி. இல்லாததால் கஷ்டம்

செட்டிக்குளம், புதன்

சின்னச் செட்டிக்குளம் கிழக்குக் காரியாதிகாரியின் பிரிவுக்கு ஒரு சமாதான நீதவான் இல்லாததால் பொதுமக்கள் கஷ்டப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதென்றும் இதனை உடனடியாக நிவிர்த்தி செய்யும்படி பொதுமக்கள் நீதிஅமைச்சருக்கு ஒரு மகஜர் அனுப்பியுள்ளனர்.

இப்பகுதியில் ஒரு சமாதானநீதவான் இல்லாததால் பொதுமக்கள் வவுனியாவுக்குச் சென்று தங்கள் தேவைகளை நிவிர்த்தி செய்யவேண்டிய நிலைமை உருவாகியுள்ளது.

## இப்படியும் நடந்தது

சாவகச்சேரி, புதன்

நுணுவில் சந்திக்கருகாமையில் நேற்று பிற்பகல் பழுதடைந்த கிளிநொச்சி-காரைநகர்பஸ்ஸில்வந்தபிரயாணிகளை விட்டுவிட்டு, பஸ் கண்டக்டர் மற்றொரு பஸ்ஸில் ஏறி யாழ்ப்பாணம் சென்றுவிட்டார்.

இதனால் அந்த பஸ்ஸில் வந்த பிரயாணிகள் மீண்டும் டிக்கட் எடுத்து மற்றொரு பஸ்ஸில் பிரயாணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இரு தடவை டிக்கட் வாங்கிய பிரயாணிகள், இது பற்றி டிப்போ உத்தியோகத்தரிடம் புகார் செய்துள்ளதாக அறியப்படுகிறது.

## இயற்கை மரணம்

வல்வெட்டித்துறை, புதன்

தொண்டமானாற்றைச் சேர்ந்த சிவல் தொழிலாளியான பற்குணத்தின் மகளான நேசமணி (வயது 9) குளிக்கச் சென்றபோது கிணற்றில் கால் தவறி விழுந்து மரணமானார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. தாமோதரம்பிள்ளை மூச்சுத் திணறியதால் இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## மேலதிக அலவன்ஸ் கிடைக்காது

கொழும்பு, புதன்

கூட்டு ஸ்தாபனங்களில் அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக கடமையாற்றும் உத்தியோகஸ்தர்களுக்கு வருங்காலத்தில் மேலதிக வேதனம் வழங்குவதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## கல்வி இலாகா புதிய திட்டம்

கொழும்பு, புதன்

பாடசாலைகளில் ஆங்கிலத்தின் தராதரத்தை முன்னேற்றக் கல்வி இலாகா ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளது.

அரசாங்க பாடசாலைகளில் ஆங்கில மொழியின் தராதரம் குறைந்துள்ளது பற்றி கல்விமந்திரி திரு. இரியகொல்லை அண்மையில் நடைபெற்ற மகாநாடொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## இருந்தும் இல்லாத நிலை

கொழும்பு, புதன்

1862-ம் ஆண்டு தட்டெழுத்தாளர் பரீட்சையில் சித்தியடைந்த பலருக்கு இன்னமும் நியமனக் கடிதங்கள் உள்ளூர் சேவைபகுதியினரால் அனுப்பிவைக்கப்படவில்லையெனத் தெரியவருகிறது. குறிப்பிட்டபரீட்சையில் இவர்கள் சித்திபெற்று நாலு ஆண்டுகள் முடிவடைந்துவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## பஸ்விபத்தில் பிக்கு மரணம்

கம்பளை, வியாழன்

பஸ்விபத்தில் காயமடைந்த பியசிறி திஸ்ஸ தேரோ கண் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின் மரணமானார். கம்பளையிலிருந்து சென்றுகொண்டிருந்த பஸ், பாதையைவிட்டு விலகியதால் இவ்விபத்து நேரிட்டதாகவும், 15 பிரயாணிகள் காயமடைந்ததாகவும் அறியப்படுகிறது.

## சபைநியமனம்

கொழும்பு, புதன்

கைத்தொழில்அபிவிருத்தி சபையின் தலைவராக திரு. சி. மயில்வாகனம் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருவாளர் ஜே. எச். லன்ரோல், பி. எச். பி. டி. சில்வா, பி. அலுவிகார, ஐ. எதிரிசிங்கி ஆகியோர் சபையின் மற்ற அங்கத்தவர்களாவர்.

## "ஒருதேர்லில்"

கொழும்பு, புதன்

துறைமுகநிலைய பொலிஸ் பகுதியினர் கொழும்பு வந்துள்ள சில வர்த்தகக் கப்பல்களைச் சந்தேகத்தின்மீது சோதனையிட்டபொழுது அங்கு ஒருவிதமான கடத்தல் பொருள்களையும் கண்டு பிடிக்க முடியவில்லை.


ஒரு பிரபலமான டுப்ளிகேட்டரின் பிரபலமான மொடல் சகாயமானவிலைக்கு உண்டு

M2

REX-ROTARY



எம்2 — விசேஷ அம்சங்கள்

காகிதங்கள் வைக்கும் பெட்டியில் 250 காகிதங்கள் வைக்கலாம். தபால் அட்டையிலிருந்து முழு அளவுக் காகிதம் வரையான எந்த அளவுள்ள காகிதத்திலும் பிரதிகள் எடுக்கலாம்.

உயரம், ஓரம் ஆகிய நிர்ணயங்களை இலகுவில் செய்யலாம். விரும்பிய விதத்தில் ஒழுங்கு செய்யக்கூடியது. ஸ்டென்சில் வெட்டுகள் செய்யக் கூடிய வகையில் சரி செய்யலாம்.

கௌண்டரில் நான்கு இலக்கங்கள் உண்டு. விரும்பினால், ஒற்றைக் கணக்கை மாற்றி சைபர் ஆக்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது. இது எடுக்கும் பிரதிகளின் எண்ணிக்கையைச் சரியாகக்கணக்கிடுகிறது. இயந்திரம் இயங்காதிருக்கும்போது கிராங்கின் சுழற்சிமுறை காற்றுப் பொறி சுழற்சி எண்ணிக்கைகளை இது கணக்கிடுவதில்லை.

இத்தனை சிறப்பு வாய்ந்த அம்சங்களுடன் கூடிய எம்—2 இன் விலை குறைவானதே. பாவிக்கும்போதும் அதிக செலவு ஏற்படுவதில்லை. இதனால்தான் எம்—2 இன் விலைக்கு அது விரைவில் நல்ல சேவைபுரிகிறது.

எம்—2 பற்றிய இன்னும் அதிகம் கூறலாம். உங்களுக்குக் கஷ்டமின்றி எவ்வளவுதூரம் அது சேவை செய்யும் என்பதை நீங்கள் அறிய வேண்டும். தொலைபேசி மூலம் அல்லது கடிதம் மூலம் எம்முடன் தொடர்புகொண்டால், எம்—2 வேலை செய்யும் விதத்தை உங்களுக்கு உங்கள் காரியாலயத்திலேயே காண்பிப்பதில் மகிழ்ச்சியடைவோம்.

விரைவில் இறக்குமதி செய்யப்படவிருக்கிறது.

ஆபீஸ் இக்கியுப்மெண்ட் லிமிட்டெட்
(OFFICE EQUIPMENT LTD.)

ஜஸ்லண்ட் கட்டிடம்,
கொழும்பு—3.

தொலைபேசி: [illegible]
தந்தி: ஆபீஸ் [illegible]



உறுதியானதும்
நீடித்து உழைப்பதும்
தன்னிகரற்றதுமான

"வைத்திலிங்கம்ஸ்"

இரும்பு - பித்தளை மர ஸ்குறூறு
ஆணிகளை

நீங்கள் வாங்குவதினால்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்கள்:-

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்

இரும்பு வியாபாரிகள்

450, பழையசோனக தெரு, கொழும்பு-12

தொலைபேசி: 7143 — 2029

கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 530


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைக்கிளோட்டப் போட்டி

யாழ்ப்பாணம், வியா. சங்கானை கிழக்கு பண்டத்தரிப்பு இளைஞர் கலைக் கழகத்தினர் யாழ். மாவட்ட சைக்கிள் ஓட்ட வீரர்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியொன்றை இம் மாதம் 14-ந் தேதி நடாத்துகின்றனர். பிரதம விருந்தினராக பொலிஸ் உத்தியோகஸ்தர் திரு ரி. தாமோதரம்பிள்ளை கலந்துகொள்வார். தங்கப் பதக்கம், பெற்றோமாக்ஸ், வெள்ளிக் குத்துவிளக்கு ஆகியன முறையே 1-ம், 2-ம், 3-ம் பரிசுகளாக வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்த் திருவிழா

சுழிபுரம், புதன் மாதகல் நுணசை முருகமூர்த்திகோவில் தேர்த் திருவிழா நேற்றுநடைபெற்றது. 300-க்கும் அதிகமான பாற்காவடிகள் பக்தர்களால் எடுக்கப்பட்டன.

REGAL--JAFFNA
NOW SHOWING!
Dirk Bogarde - Mary Ure
in
THE
MIND BENDERS
(Adults Only)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - தேவிகா
நடித்த
முரடன் முத்து

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45க்கு
மனோகர் - மனோரமா
நடித்த
கொஞ்சும் குமரி

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ண (திருகோணமலை)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் —— மனோரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
நவராத்திரி

வை. எம். சி. ஏ.

# 3-ம் வருட "டேபிள்டென்னிஸ்" போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன் யாழ். மாவட்ட வை.எம்.சி. ஏ. 'டேபிள் டெனிஸ்' சங்கத்தினால் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் அண்மையில் நடாத்தப்பட்ட 3-ம் வருட டேபிள்டெனிஸ் விளையாட்டுப் போட்டிகளில் அரசாங்க சேவையாளர் கோஷ்டியின் தலைவரான பி. வி. கோபாலகிருஷ்ணன் மூன்று முதல் இடங்களைக் கைப்பற்றினார். 15 வயதான டபிள்யு என். குகானந்தனுடைய விளையாட்டு பாராட்டக்கூடியதாகவிருந்தது.

அங்கத்தவர்களுக்கான போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம்:

சிறுவர் ஒற்றை ஆட்டம்: இப்போட்டியில் டபிள்யு என் குகானந்தனும், டி. லோறன்ஸும் போட்டியிட்டனர். இதில் டபிள்யு என் குகானந்தன் முறையே 22/15, 21/16, 21/17 புள்ளிகள் பெற்று வெற்றிகண்டார்.

சிறுவர் இரட்டை ஆட்டம்: இப்போட்டியில் டபிள்யு என் குகானந்தனும், டி லோறன்சும் சேர்ந்து, டி எஸ் என் செல்லத்துரையையும், எம் இராசநாயகத்தையும் 21/14, 21/14, 22/4, 21/11 புள்ளிகள் பெற்று வெற்றிகண்டனர்.

ஆண்கள் ஒற்றையாட்டம்: இப்போட்டியில் எ தர்மசுதனும் எதிராக டபிள்யூ எம் குகானந்தனும் போட்டியிட்டு, எ. தர்மசுதன் 21/17, 21/18, 21/17 புள்ளிகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

ஆண்கள் இரட்டை ஆட்டம்: இப்போட்டி டபிள்யு என் குகானந்தனுக்கும், அ வைத்தீஸ்வரனுக்கும், எ தர்மசுதன், பி ஞானச்சந்திராவுக்குமிடையே நடைபெற்றது. இப்போட்டியில் அ வைத்தீஸ்வரன், குகானந்தன் கோஷ்டியினர் 15/21, 19/21, 22/25, 21/15, 21/7 புள்ளிகள் பெற்று வெற்றியீட்டினர்.

வெளியாருக்கான ஒற்றையர் ஆட்டம்: இப்போட்டி பி. வி. கோபாலகிருஷ்ணனுக்கும், ஆர். தர்மதாசுக்கும் இடையே மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. இப்போட்டியில் பி வி கோபாலகிருஷ்ணன் முறையே 18/21, 21/15, 21/14, 21/14 புள்ளிகள் பெற்று வெற்றியீட்டினார்.

வெளியாருக்கான இரட்டை ஆட்டம்: இப்போட்டி பி வி கோபாலகிருஷ்ணன், ஆர் தர்மதாஸ் இரட்டையருக்கும் ஏ வைத்தீஸ்வரன் டபிள்யு என் குகனைந்தன் இரட்டையருக்குமிடையே நடைபெற்றது. இப்போட்டியில் பி வி கோபாலகிருஷ்ணன், ஆர் தர்மதாஸ் இரட்டையர் 21/10, 21/13, 21/17 புள்ளிகளைப்பெற்று வெற்றியீட்டினர்.

ஆண் - பெண் இரட்டையர் ஆட்டம்: இப்போட்டியில் பி வி கோபாலகிருஷ்ணனும், செல்வி கங்கா கந்தையாவும் எதிர் ஆர் தருமதாஸ், செல்வி தத்தி கந்தையாவும் போட்டியிட்டனர். இப்போட்டியில் பி வி கோபாலகிருஷ்ணன், செல்வி கங்கா கந்தையா, இரட்டையர் 13/21, 21/7, 21/17, 21/11 புள்ளிகள் பெற்று வெற்றியீட்டினர்.

இப் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் கலந்துகொண்டார். திருமதி சபாரத்தினம் வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசில்களை வழங்கினார். இந் நிகழ்ச்சிகள் யாவும் யாழ். வை எம் சி ஏ கட்டடத்தில் நடைபெற்றது.

'ஈழநாடு' வெள்ளிக்கிண்ணம்

# ஒலிம்பிக்கழக கரபந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன் 'ஈழநாடு' வெள்ளிக்கிண்ணத்துக்காக ஒலிம்பிக் விளையாட்டுக்கழகம் நடத்தும் கரபந்தாட்டப் போட்டியில் "ஏ" பகுதியில் இரண்டாவது பிரிவில் சாவகச்சேரி நியூசென்ட்ரல்விளையாட்டுக் கழகம் மாவிட்டபுரம் யுனைட்டெட் விளையாட்டுக் கழகழத்தை வெற்றிகொண்டது. ஸ்கோர்: 14-8, 14-10.

போட்டிகள் நடைபெற்ற விளையாட்டு மைதானத்தில் முதற் தடவையாக தோற்றமளித்த சாவகச்சேரி விளையாட்டுக்கழகம், பலரும் எதிர்பாராத வகையில் திறமையாக விளையாடியது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆரம்பம் முதல் இறுதி வரை விறுவிறுப்பாக விளையாடிய இக்கோஷ்டியில் ராஜன், பாலசிங்கம் ஆகியோரின் விளையாட்டு பாராட்டத்தக்கது. தோல்வி கண்ட கோஷ்டியில் கந்தையாவின் விளையாட்டு குறிப்பிடத்தக்கது. இப்போட்டிக்கு திரு. சி. எஸ். சண்முகராஜா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

### முதல்பிரிவு

முதலாவது பிரிவில் (குறூப்-1) கரவெட்டி யுனைட்டெட் விளையாட்டுக் கழகம்மூன்று போட்டிகளிலும்வெற்றி கண்டு சம்பியனானது!

இப்பிரிவில் முதலாவது போட்டியில் படகுதுறை விளையாட்டுக் கழகத்தை (2-1) வெற்றியீட்டின.

இதில் படகுதுறை விளையாட்டுக்கழகத்தை அதிக குறை சொல்லுவதிலும் அர்த்தமிருக்காது. இக் கோஷ்டி அதிக அனுபவம் இல்லாதது. ஆனால் கரவெட்டி யுனைட்டெட் கழகம் இதற்கு எதிர்மாறானதாகும். இக்கோஷ்டியினர் திறமையாக விளையாடி மிகவும் சுலபமாக வெற்றி பெற்றுவிட்டனர். இப் போட்டிக்கு திரு. வி. நாகரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

இரண்டாவது போட்டியில் கரவெட்டி யுனைட்டெட் விளையாட்டுக்கழகம் காங்கேசன்துறை [illegible] விளையாட்டுக்கழகத்தை வெற்றியீட்டியது. ஸ்கோர்: 14-10, 14-9. இதில் காங்கேசன்துறைக் கோஷ்டியினரின் விளையாட்டு ஓரளவு தரம் குறைந்ததாகக் காணப்பட்டது. வரப்பிரதாசன், நடராஜா ஆகியோரின் விளையாட்டு பாராட்டத்தக்கது.

கரவெட்டி யுனைட்டெட் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த துரைசிங்கம், கனகரத்தினம் ஆகியோர் திறமையாக விளையாடினார்கள். இப்போட்டிக்கு திரு. சி. எஸ். சண்முகராஜா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## ஆனைக்கோட்டை கோஷ்டி வெற்றிபெற்றது

சுழிபுரம், புதன் வழக்கம்பரை இளைஞர் விளையாட்டுக் கோஷ்டிக்கும் ஆனைக்கோட்டை இளைஞர் விளையாட்டுக்கழகக் கோஷ்டிக்குமிடையே சினேகபூர்வமாக நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஆனைக்கோட்டைஇளைஞர் கோஷ்டி வெற்றிபெற்றது.

வழக்கம்பரை மைதானத்தில் இப் போட்டி நடைபெற்றது. ஆனைக்கோட்டை கோஷ்டியினர் 3 விக்கெட்டுகளாலும் 68 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றனர்.

## "பொது சேவையில் வாலிபர் ஈடுபட வேண்டும்"

யாழ்ப்பாணம், வியா இப்பகுதியிலுள்ள தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றுவதற்கு இப்படியான கிளைக்காரியாலயங்களால் அதிகமான சேவை செய்யமுடியும் என்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் எம் பி திரு ஜி. ஜி பொன்னம்பலம் அராலியில தமிழ்க் காங்கிரஸ் கிளைக் காரியாலயத்தை திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்-

இக்கிளைகள்மூலம் அவ்வப்பகுதி தேவைகளை உள்ளுக்குடன் அறிந்துகொள்ள முடியுமென்றும், இங்குள்ள வாலிபர்கள் பொது சேவையில் ஈடுபட்டு கிராமத்தை முன்னேற்ற வேண்டுமென்றும் திரு. பொன்னம்பலம் கூறினார். புதிய கிளையின் உத்தியோகத்தர்கள் தெரிவும் நடைபெற்றது.

## வரிவிளம்பரம்

### தேவை

பண்டசாலைப் பொறுப்பாளர்: இலங்கைப் பிரஜையாகவும், கனிஷ்ட தராதரப் பத்திரத்தில் சித்தியடைந்தவராகவும், கூட்டுறவுப் பயிற்சி பெற்றவராயும் 15-5-66-ல் 21 வயதிற்கு மேற்பட்டவராயும் 45 வயதிற்குட்பட்டவராயும் உரொக்கம் ரூபா1000/-மும் ஆதனம் ரூ 2000/-மும்பிணை கட்டக்கூடியவராக இருத்தல் வேண்டும். மாதாந்த வேதனம் ரூபா 125/- (எல்லாம் உட்பட) முடிவு திகதி: 15-5-66. காரியதரிசி, வவனியா கிழக்கு பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம் லிமிட். 297

வடமராட்சி மகளிர் மன்றம் மாணவிகளுக்கு, நடனம் பயிற்றுவிப்பதற்கு நடன ஆசிரியை தேவை. கலாக்ஷேத்திரப்பயிற்சிபெற்றவர்கள் 15-5-66-க்கு முன் விண்ணப்பிக்கவும். சாவித்திரி தேவி மாணிக்கவாசகர், செயலாளர், வடமராட்சி மகளிர் மன்றம், பிரதான வீதி, பருத்தித்துறை. 299

### விற்பனைக்கு

வண்ணார்பண்ணை கன்னாதிட்டி வீதி 34-ம் இலக்க புதிய வீடும் வளவும் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு இல. 303, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 303

வவனியா நகரசபை எல்லைக்குள் வேப்பங்குளத்தில் (பிரதான வீதி) 5 ஏக்கர் நிலம் விற்பனைக்குண்டு. 30 அடி அகலமுள்ள கிணறு அடங்கிய இக்காணியில், 75 தென்னை மரங்களும், 30 மா மரங்களும் வேறு பிரயோசனங்களும் உண்டு. வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் உகந்த இடம். எஸ். சந்திரசேகரம், தபாற்கந்தோர், வவனியா. 291

பரந்தன் கண்டாவளை றேட்டு இரணைமடு மேற்கு சங்கத்துக்குஎதிராக 16 1/2 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. விபரத்துக்கு C/o 'ஈழநாடு', விளம்பர இல. 296 என எழுத்துமூலம்விண்ணப்பிக்கவும். 296

நல்ல திறமான முற்றிய மவுக்கினி மரங்களில் அரியப்பட்ட அகலம் நீளம் கொண்ட மவுக்கினி பலகைகள் விற்பனைக்கிருக்கிறது. தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். காசிப்பிள்ளை மரக்காலை, 5-ம் நம்பர் மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். 301

500 முகச்சவரத்தில் இனம்! இனம்!! ரூபா 25/- இனம்!!! பிரசித்திபெற்ற சாப்பினிங் கொம்பவுண்டைக்கொண்டு ஒரேஒரு பிளேட்டில் நூற்றுக் கணக்கான சுத்தமான முகச்சவரஞ் செய்வதால் இனம். 15 சதப் பக்கெற்றில் பரீட்சியுங்கள். ஒமேகா, கொடிகாமம். 298

### கல்வி

பலாலி விசேட ஆசிரிய பயிற்சி விண்ணப்பப் பத்திரத்திற்கு 5-10 சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும். வர்த்தகக்கல்வி நிலையம், திருநெல்வேலி. 300

### வைத்தியம்

தொய்வு, க்ஷயம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தில் நடைபெறும் உலக உதைபந்தாட்ட போட்டி

## போர்த்துக்கல் சவால்நாடாக விளங்கும்

லிஸ்பன், மே 4

ஜூலை மாதம் இங்கிலாந்தில் நடைபெறவிருக்கும் உலக உதைபந்தாட்டப் போட்டியில் போர்த்துக்கல்முக்கிய சவால் நாடாக ளைங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சமீப வருடங்களில் அதுஉலகத்தின் மிகச்சிறந்த உதைபந்தாட்டக் கோஷ்டிகளை முறியடித்திருக்கிறது.

உலக உதைபந்தாட்டப் போட்டியில் இறுதிக்கட்டத்திற்கு வரும் முயற்சியில் ஆறுதடவைகள் போர்த்துக்கல் தோல்வியடைந்திருக்கிறது. ஆனல் தற்சமயம் அதுநான்கு முக்கிய சர்வதேச வெற்றிகளுடன் புதிய ஒரு சவால் நாடாக முன் வந்துள்ளது.

செக்கோஸ்லோவேகியாவை 1962-ல் போர்த்துக்கல் வெற்றிபெற்றதும். உலகசாம்பியன் பிரேஸிலுடன் நடைபெற்ற போட்டி வெற்றி தோல்வின்றி முடிவடைந்ததும் குறிப்பிடத்தக்கது

போர்த்துக்கல் கோஷ்டியில் உலகின் மிகச் சிறந்த விளையாட்டுக்காரர்கள் சிலர் இருக்கின்றனர். பிரேஸிலைச் சேர்ந்த நட்சத்திரம் பேலுக்கு அடுத்த ஸ்தானத்தை வகிப்பதாகக் கூறப்படும் இயூஸெபியோ அவர்களில் ஒருவர். வைஸெண்டி என்ற மற்றோர் போர்த்துக்கல் வீரர் புதிய கோஷ்டியில் இடம்பெறவிருக்கிருர். இருவிளையாட்டுக்களில் இவரும் சில அம்சங்களில் பேலுடன் சமநிலையை வகித்திருக்கிருர்.

1947-ம் ஆண்டில் லிஸ்பனில் நடைபெற்ற சர்வதேச உதைபந்தாட்டப் போட்டியில் இங்கிலாந்து 10—0 கோல்களால் போர்த்துக்கலைத் தோற்கடித்தது. ஆனல் இதற்குப்பின் போர்த்துக்கேய கோஷ்டி இப்போது சக்திவாய்ந்த கோஷ்டியாக வளர்ந்துவிட்டது. இறுதிப்போட்டியில் வருகிற ஜூலை மாதம் அது கலந்து கொள்ளத் தகுதி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரேஸில், ஹங்கேரி, பல்கேரியா, நார்வே, ஸ்காட்லந்து, டென்மார்க், உருகுவே, ருமேனியா, பெல்ஜியம் ஆகிய நாடுகளின் புகழ்பெற்ற கோஷ்டிகள் இதில் கலந்துகொள்ளும்.

## கிராமசேவையாளருக்கு பாராட்டு

அல்லைப்பிட்டி, புதன்

"அல்லைப்பிட்டியில் ஓர் கிராமமுன்னேற்றச்சங்கம் 1951-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டும் இதுவரை செயலாற்ருது ஒய்ந்து கிடந்தது, தற்பொழுது கிராமசேவையாளராகப் பதவி வகிக்கும் திரு. வை. கா. தளையசிங்கத்தின் தீவிர முயற்சியின் பயனே இன்று இச்சங்கம் புதிப்பிக்கப்பட்டு ஓர் நெசவு நிலையத்தையும் உருவாக்கத் திட்டமிட்டது. நாட்டின் பொருளாதாரவிருத்திக்கும், ஏழைமக்கள் பிழைப்பிற்கும் ஏற்ற நெசவுநிலையத்தை இச்சங்கம் ஒரே முகத்தோடு உருவாக்கத் தீர்மானித்ததையிட்டு நான் பெருமயடைகிறேன்"

இவ்வாறு அல்லைப்பிட்டிக் கிராமசபை உறுப்பினரும், கிராமமுன்னேற்றச்சங்கத் தலைவருமாகிய திரு. வ. சபாரத்தினம் கிராமமுன்னேற்றச்சங்கம் உருவாக்கும் நெசவுநிலைய அடிக்கல் நாட்டுவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஊர்காவற்றுறைப் பிரதிநிதி அடிக்கல் நாட்டினர். பலர் உரைநிகழ்த்தினர்.

## 150 தொகுதிகளில் வெற்றிபெறுவோம்

### அண்ணதுரை பேச்சு

தஞ்சாவூர், மே 4

"கடந்த தேர்தலில் 200 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் 56 லட்சம் வாக்குகளையும். 130 தொகுதிகளில் போட்டியிட்ட திராவிட முன்னேற்றக்கழகம் 34லட்சம் வாக்குகளையும் பெற்றது. அத்துடன் திராவிட முன்னேற்றக் கழகம் 51 தொகுதிகளில் வெற்றிபெற்றது. எதிர்வரும் தேர்தலில் 150 தொகுதிகளில் வெற்றிபெறுவோம்."

திலக்மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திராவிட முன்னேற்றக்கழக தலைவர் திரு. சி. என், அண்ணதுரை மேற்கண்டவாறு கூறினர்.

சட்ட சபைகளில் வர்த்தகர்களுக்கு பிரதிநிதிகள் இருக்கவேண்டும் என்ற கோரிக்கையை ஆதரிப்பதாகவும் எதிர்வரும் தேர்தலில் 20 தொகுதிகளில் வர்த்தகர்கள் போட்டியிடுவார்களென்றும் திரு. அண்ணதுரை கூறினர்.

## 970 லட்சம்டன்உற்பத்தி

புதுடில்லி, மே 4

இவ்வாண்டு இந்தியாவில் 970 லட்சம் டன் உணவு உற்பத்தி சாத்தியம் என உணவுமந்திரி திரு. சுப்ரமண்யம் தெரிவித்தார்.




## கொழும்பு

### வியாழன் 5-5-66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 புத்தரின் மோட்சம்- இசைச்சித்திரம், 7-30 வாய்ப்பாட்டு, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**844 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 திரைஇசை, 1-00 கதம்பஇசை,

**844 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் கழகம், 5-45 தேர்ந்த இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 சங்கீதவகுப்பு. 7-00 பேச்சு, 7-15 தாளவாத்தியக்கச்சேரி, 7-45 நாடகம் — 'குண்டலகேசி', 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-45 நற்சிந்தனை, 9-30 நிலையஒலிப்பதிவு.

## 2,00,000!

கொழும்பு, புதன்

அண்மையில் வெளியான 'இலங்கை தொழில் பகுதி வர்த்தமானி'யின் தகவல்களுக்கிணங்க இலங்கையில் இரண்டு இலட்சம் பேர் வேலையில்லா திருக்கிருர்கள் என அறிக்கப்பட்டுள்ளது,

வேலைதேடி பதிவுசெய்யப்பட்டவர்களின் விபரம் வருமாறு: குமாஸ்தா பிரிவு 56,413, பயிற்சி பெற்றவர்கள் 19,872. ஓரளவு பயிற்சிபெற்றவர்கள்: 49,634. பயிற்சியற்றவர்கள்76,501.

## புதிய பஸ் சேவைகள்

யாழ்ப்பாணம். வியா.

யாழ்ப்பாணத்திற்கும் சங்கானைக்குமிடையில் இரட்டைத்தட்டு பஸ்சேவை இம் மாதம் 1-ம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சங்கானை பட்டின சபைத் தலைவரின் வேண்டுகோளின்படி ஆரம்பிக்கப்பட்டுள்ள இச்சேவை தினமும் மும்முறை நடைபெறுகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து மானிப்பாய் ஊடாக உடுவிலுக்கு புதிய பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## ஆண்டுவிழா

மாவிட்டபுரம், புதன்

மல்லாகம் வாணிவாசக் கல்விநிலையத்தில் திரு. ம. சி, சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கல்விநிலையத்தின் ஆண்டுவிழாவில் திருவாளர்கள்: வ. பேரின்பநாயகம், சே வி. மகாதேவன். க. தர்மலிங்கம், அ. தம்பாபிள்ளை, க. சிவஞானசுந்தரம், வை. தங்கராசா ஆகியோர் பேசினர். பலாலி ஆசிரிய மயிற்சிக் கலாசாலை மாணவர் திரு. சிவலிங்கம் நன்றிகூறினர். தேநீர்விருந்தும் அளிக்கப்பட்டது.

## தெல்லிப்பழை கொலை வழக்கு

மாவிட்டபுரம், புதன்

தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த முதலி சின்னவன் என்பவர் சென்ற மாதம் ஏழாம் திகதி கொலைசெய்யப்பட்டிருந்த ஆண்டி முதலி, நீலன் முருகன், ஆண்டி கதிரன், நாகன் மாதன், ஆண்டி சடையன், ஆண்டி ஆருன் ஆகிய ஆறுபேரும் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ஜி. எவ். எச். அத்துருபாரு முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

சுன்னுகம் பொலிஸாரின் சார்பில் ஆஜரான சார்சண்ட் தம்பிராசா சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்தார். குற்றப்பத்திரிகையில் சந்தேக நபர்கள் ஆறுபேரும் ஏப்ரல் மாதம் 7-ம் திகதி தெல்லிப்பழை கிழக்கில் சட்டவிரோதமாகக்கூட்டம் கூடியதாகவும், கலகம் விளைவித்ததாகவும், முதலி சின்னவனை கொலை செய்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது நீதிபதி எதிரிகளுக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டை வாசித்தயின் வழக்கை விசாரணைக்காக 13-5-66க்கு ஒத்திவைத்து அத்திகதிவரை எதிரிகளை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராரூர்.

## மேனனுக்கு 70 வயது

புதுடில்லி, மே 4

ஐ. நா வின் பிரபல பேச்சாளரான முன்னள் இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. கிருஷ்ணமேனன் தனது 70வது பிறந்ததினத்தை நேற்றுக் கொண்டாடினர்.

மேனனுக்கு 69 வயதென்பது மேற்குநாட்டு முறை [illegible] இந்தியாவைப் பொறுத்தவரை பிறந்த தின ஆரம்பம் அந்த ஆண்டையும் சேர்த்துக் குறிப்பதாகும். (பி டி ஸி)

# வியட்னும் அமைதிக்கு இந்தியா முயற்சி?

## டில்லி அதிகாரி ஹானேய் விஜயம்

ஹானேய், மே 4

வியட்னுமில் யுத்தத்தை நிறுத்தும் பல சர்வதேச முயற்சிகளில் ஒன்ருக இந்தியாவும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது.

இந்திய வெளிநாட்டிலாகாவைச் சேர்ந்த ராஜதந்திரி ஒருவர் ஹானேய்க்குச் சமீபத்தில் சென்றிருந்தது இவ் விஷயமாக அல்ல, என வெளிநாட்டு ராஜாங்கமந்திரி திரு. தினேஷ்சிங் கூறிய போதிலும், கனடாவின் யோசனையைத் தழுவிய தான ஒரு யோசனையை சமர்ப்பிக்கவே அவர் சென்றிருந்தார் என நம்பப்படுவதாக சர்வதேசவட்டாரங்கள்கருதுகின்றன. எனினும் இந்த உயர்அதிகாரி ஹோசிமின்னைச் சந்திக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

வியட்னுமில் யுத்தத்தை நிறுத்த அங்கிருந்து அமெரிக்கத்துருப்புக்களும் வடவியட்னும் துருப்புக்களும் வாபஸ்பெறவேண்டும் என கனடா யோசனை கூறியிருந்தது. இந்தியா இந்த யோசனையை ஆதரிப்பதாய் கூறப்படுகிறது,

## போக்குவரத்து தடை

வாரியப்பொல, புதன்

மூவான்வெல்ல என்னும் இடத்தில் புதிய பாலம் ஒன்று கட்டப்படுவதால் குருநாக்கலை—புத்தளம் பிரதானவீதி போக்குவரத்து தற்காலிகமாக தடைசெய்யப்பட்டுள்ளது.

## பணத்தை பறித்ததாக வழக்கு

மாவிட்டபுரம், புதன்

குரும்பசிட்டியைச் சேர்ந்த தியாகு என்றழைக்கப்படும் அரியகுட்டி செல்வரத்தினம் என்பவர் சென்ற வருடம் ஏப்ரல் மாதம் 17-ம் திகதி அதேயூரைச் சேர்ந்த சிவசம்பு கிருஷ்ணகாந்தன் என்பவரிடம் 125 ரூபாய் பணத்தை அடித்துப் பறித்ததாக காங்கேசன் துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச் அத்துருபாரு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பொலிஸ் தரப்பில் சிவசம்பு கிருஷ்ணகாந்தன், திருமதி பரமேஸ்வரி இராசேந்திரம், திருமதி பாஞ்சாலி நவரத்தினம், பொலிஸ் கான்ஸ்டபிள் சோமசுந்தரம் ஆகியோரும் எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை, அரியகுட்டி செல்வரத்தினம் ஆகியோரும் சாட்சியமளித்தனர். இதனைத் தொடர்ந்து எதிரிதரப்பு வழக்கறிஞர் தொகுப்புரை நிகழ்த்தினர் தொகுப்புரையின் பின் நீதிபதி எதிரியைக் குற்றவாளியாகக் கண்டார். எதிரியின் விரல் அடையாளங்களை எடுக்கும்படி பொலிசாருக்கு உத்தரவிட்ட நீதிபதி தண்டனை வழங்குவதற்காக வழக்கை இம் மாதம் 14-ம்திகதி ஒத்திவைத்தார்.

காங்கேசன்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தியின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் வழக்கை நடத்தினர். எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். நடராசா ஆஜராரூர்.

## வடபகுதி அசைஸ் விசாரணை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், வியாழன்

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தின் முதலாவது பருவகால விசாரணை நாளைக் காலை நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு தம்பையா கியூ. சி. முன்னிலையில் ஆரம்பமாகும்.

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் ஆரம்பமாகும் அசைஸ் விசாரணைகளில், 18 கொலை வழக்குகளும், இரு கொலை முயற்சி வழக்குகளும் இடம்பெறும் என அறியப்படுகிறது.

## அன்று நேலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்தையளித்தார்கள். அந் நிலத்தில் ஒரு ஏக்கர் நஞ்சையும், இரண்டு ஏக்கர் புஞ்சையும் நிலமில்லாதவர்களுக்கு பகிர்ந்து கொடுத்து, 5 மாதத்திற்கு வேண்டிய அத்தியாவசிய பொருட்களும் கொடுத்தோம். அதுமட்டுமன்றி மாடுகள், கலப்பைகள் வழங்கினேம். இன்று அவர்கள் நிம்மதியாக வாழ்கின்றார்கள்.

இந்நாட்டிலுள்ள பனைமரங்களைசர்வோதய புரட்சி மூலம் பயன்படுத்திஞல், பனை மரங்களிலிருந்து சீனி செய்வீர்களானல், பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யமுடியும். கிராமத்தில் கைத்தொழில் சாலைகளை ஏற்படுத்தி ஏராளமானேருக்கு வாழவழிகாட்டலாம். 47-ம் ஆண்டு இந்தியாவில் 400 துணி மில்கள் இருந்தன. இன்று அங்கு 1400 துணி மில்களில் பல்லாயிரக்கணக்கானேர் பணியாற்றுகிருர்கள். நம்முடைய கரங்களில் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும்.

## இந்தோ மலே சமாதானம்

ஜாகர்த்தா, மே 4

இந்தோனேஷியாவுக்கும் மலேஸியாவுக்கு மிடையிலுள்ள தகராறுகள் தீர்ந்து மீண்டும் இரு நாடுகளுக்குமிடையில் சமாதானம் நிலவக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

இரு நாடுகளுக்குமிடையில் சமாதானம் ஏற்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி திரு. ஆதம் அலி விருப்பம் தெரிவித்தார் பிலிப்பைன் நாட்டுக்கு விஜயம் செய்துவிட்டு இன்று ஜகார்த்தா திரும்பிய அவர் பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசினர், பிலிப்பைன்அரசாங்கம் இந்தோனேஷியாவுக்கும் மலேஸியாவுக்குமிடையில் இருக்கும் பிரிவுக்குறைகளைத்தீர்த்து மீண்டும் நட்புறவை ஏற்படுத்தும் முயற்சிகளில் சமீபகாலமாக ஈடுபட்டு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## மஹோற்சவம்

நவாலி, புதன்

நவாலியூர் ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் மகோற்சவம் இம் மாதம் 11-ந் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் வரை நடைபெறும்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, [illegible] இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org